DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 65/2016 |
| Deposition of Witness for | : | P.W.10 |
| Name | : | **டாக்டர். ஸ்ரீ ஹரி** |
| Father's Name | : | **ராமகிருஷ்ணன்** |
| Village | : | **தாலையூத்து, ESI மருந்தகம்,** |
| Taluk | : | **திருநெல்வேலி** |
| Calling | : | **மருத்துவ அலுவலர்** |
| Age | : | **45/2025** |

**(வழக்கின் எதிரிகள் 7, 8, மற்றும் 11 ஆஜர். 1, 2, 3, 4, 5, 6, 9, 10 மற்றும் 12 -ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5, 6, 9, 10 மற்றும் 12 -ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.11.2025

(காணொளி வாயிலாக சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்சமயம் திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து கிராமம், ESI மருந்தகத்தில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்த சமயம் கடந்த 24.01.2015 ம் தேதி ஜெயமணி வயது 33 என்பவருக்கு கழுத்தின் பின்பகுதியில் ஊமைக்காயத்துடன் வந்தவரை இரவு 9.20 மணிக்கு வந்தவரை OP.No.4381 பிராகரம் பதிவு செய்தும் முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி

மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அவர் 24.01.2015 முதல் 26.01.2025 ம் தேதி வரை சிகிச்சையிலிருந்தவரை அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அறிக்கை அனுப்பி வைத்ததை பார்வையிட்டு சாட்சி ஜெயமணிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. சண்முகம் வயது 63 என்பவருக்கு வலது முட்டியில் 1x1cm அளவில் சிராய்ப்பு காயமும், 3x5cm அளவில் வலது முட்டியில் ரத்தக்காயமும், இடது கணுக்காலுக்கு மேல் 2x3cm அளவில் சிராய்ப்பு காயத்துடன் வந்தவரை 24.01.2015 தேதி 9.05 மணிக்கு OP.No.4378 பிரகாரம் பதிவு செய்தும் முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அவர் 24.01.2015 முதல் 26.01.2025 ம் தேதி வரை சிகிச்சையிலிருந்தவரை அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அறிக்கை அனுப்பி வைத்ததை பார்வையிட்டு சாட்சி சண்முகத்திற்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.6** ஆகும்.

3. சிவரஞ்சனி வயது 13 என்பவர் வலது காலில் ஊமைக்காயத்துடன் வந்தவரை 24.01.2015 தேதி 9.10 மணிக்கு OP.No.4382 பிரகாரம் பதிவு செய்தும் முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அவர் 24.01.2015 முதல் 26.01.2025 ம் தேதி வரை சிகிச்சையிலிருந்தவரை அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அறிக்கை அனுப்பி வைத்ததை பார்வையிட்டு சாட்சி சிவரஞ்சனிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.7** ஆகும்.

4. செல்வகணபதி வயது 15 என்பவருக்கு பின்தலையின் இடதுபக்கத்தில் 1x3cm அளவில் வெட்டுக்காயத்துடன் வந்தவரை 24.01.2015 தேதி 9.00 மணிக்கு OP.No.4379 பிரகாரம் பதிவு செய்தும் முதலுதவி செய்து மேல்

சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அவர் 24.01.2015 முதல் 26.01.2025 ம் தேதி வரை சிகிச்சையிலிருந்தவரை அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அறிக்கை அனுப்பி வைத்ததை பார்வையிட்டு சாட்சி செல்வகணபதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மேற்படி காயங்கள் அனைத்தும் கூட்ட நெரிசலில் தடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு. காயம்பட்டதாக சொல்லப்பட்ட நேரத்திற்கு 2 மணி நேரத்திற்கு முன்பாக ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சண்முகம் என்னிடம் தன்னை 30 நபர்கள் தாக்கியதாக கூறியிருக்கிறார் என்றால் சரிதான். சிவரஞ்சனி தன்னை 35 நபர்கள் தாக்கியதாக கூறியிருக்கிறார் என்றால் 65 பேர் கொண்ட கும்பலில் 35 பேர் தாக்கியதாக குறிப்பிட்டிருந்தார். தன்னை யார் யார் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. காயம்பட்ட நபர்கள் குறிப்பிட்டு எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என சொல்லவில்லை என்றால் சரியல்ல, இரவு 8.00 மணி என்று குறிப்பிட்டுள்ளார்கள். காயம்பட்டவர் எந்தெந்த ஆயுதங்களால் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, அனைவருமே கற்களால் தாக்கப்பட்டதாக சொல்லியுள்ளார்கள்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.03 12:48:[illegible]

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**